**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

செ.வெ.எண். 276 நாள்: 08.07.2026

**மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள், மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, வார்டு-126க்குட்பட்ட 4ஆவது ட்ரஸ்ட் லிங்க் தெருவில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நவீன பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினை இன்று பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.**

மயிலாப்பூர் சட்டமன்றத் தொகுதி, பெருநகர சென்னை மாநகராட்சி, தேனாம்பேட்டை மண்டலம், வார்டு-126க்குட்பட்ட 4ஆவது ட்ரஸ்ட் லிங்க் தெருவில் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட நவீன பெண்கள் உடற்பயிற்சிக் கூடத்தினை மாண்புமிகு உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் திரு.ப.வெங்கடரமணன் அவர்கள் இன்று (08.07.2026) பயன்பாட்டிற்குத் திறந்து வைத்தார்.

இந்த உடற்பயிற்சி மையமானது மாண்புமிகு மேயர் அவர்களின் மேம்பாட்டு நிதியில் ரூ.50 இலட்சம் மதிப்பீட்டிலும், 126ஆவது வார்டு மாமன்ற உறுப்பினர் மேம்பாட்டுத் திட்ட நிதியில் ரூ.30 இலட்சம் மதிப்பீட்டிலும் என மொத்தம் ரூ.80 இலட்சம் மதிப்பீட்டில் 750 சதுர அடி பரப்பளவில் கட்டப்பட்டுள்ளது. இந்த உடற்பயிற்சிக் கூடத்தில் Thread mill, Cycling, Elliptical, Multigym, Twister உள்ளிட்ட உடற்பயிற்சி உபகரணங்கள் அமைக்கப்பட்டுள்ளது. இதனால் மந்தைவெளிப்பாக்கம், கடற்கரையோர குடியிருப்புப் பகுதிகளில் உள்ள மக்கள் பயனடைவர்.

இதனைத் தொடர்ந்து, இதனருகில் உள்ள மாற்றுத்திறனாளிகளுக்கு உடல் மற்றும் மனம் சம்பந்தப்பட்ட மறுவாழ்வு சேவைகளை வழங்குவதற்காக அமைக்கப்பட்டுள்ள விழுதுகள் ஒருங்கிணைந்த சேவை மையத்தினை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பார்வையிட்டு, வழங்கப்படும் சேவைகள் குறித்து கேட்டறிந்து, அங்குள்ள குழந்தைகளுடன் கலந்துரையாடினார். பின்னர், அப்பகுதியில் உள்ள சென்னை நடுநிலைப் பள்ளியினைப் பார்வையிட்டு, பள்ளி மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

தொடர்ச்சியாக, வார்டு-124க்குட்பட்ட சிலாட்டர்புரத்தில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு பயன்பாட்டில் உள்ள ஒப்பனை அறையினைப் பார்வையிட்டு, அங்குள்ள பொதுமக்களிடம் குறைகள் குறித்து கேட்டறிந்து, அவற்றின் மீது உடனடி நடவடிக்கை மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வுகளில், மத்திய வட்டார துணை ஆணையர் திரு.எச்.ஆர்.கௌஷிக், இ.ஆ.ப., மாமன்ற உறுப்பினர் திருமதி அமிர்தா வர்ஷினி, மண்டல அலுவலர் (பொ) திரு.க.வரதராஜன், செயற்பொறியாளர் (பொ) திருமதி வித்யா மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**